**நாள்.28.01.2020 CC.No.187/2017 அசா.5 தி. சுப்பிரமணியன்**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)**

நான் தற்போது குமரலிங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.08.2012 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு உடுமலை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது திருமதி. சந்தியா மகேஷ் என்பவரால் கொடுக்கப்பட்ட எழுத்து மூலப்புகாரை காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தபால் மூலமாகப் பெறப்பட்டதை நிலையக் குற்ற எண்.656/2012, ச/பி 468, 471, 420 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 பதிவு செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**கு.வி இல்லை.**